# யோசேப்பு வழிகாட்டும் நீதிமான்

இறையன்பில் இனியோரே, இறைவனின் மீட்புத்திட்டத்தில் மீட்பராம் இயேசுவின் அருட்காவலாக, உற்றத்துணையாக, விளங்கியவர் தூய யோசேப்பு. திருவிவிலியம் அவரை 'நீதிமான்" எனக் கோடிட்டுக் காட்டுகிறது. தூய யோசேப்பின் பண்பு நலன்கள், நீதிமானின் நெறிச்செறிந்த வாழ்வுக்கு வழிகாட்டுகின்றன. எவ்வாறெனில்...?

**தன்னடக்கம் - மிக்க தயாளன்**

தூய யோசேப்பு, தன்னடக்கம் மிக்க தயாளனாக நமக்குக் காட்டும் வழி இதோ. இல்லறம் நடத்தும் முன்னே கருவுற்ற மரியாவைக் காட்டிக் கொடுக்கத் துணியாமல், கன்னியத்துடன் அச்செய்தியைத் தனக்குள் அடக்கிவைத்து, தனக்கு மட்டுமே தெரிந்த அச்செய்தியைப் பகிரங்கப் படுத்த விரும்பாமல் மறைவாக விலக்கிவிடத் திட்டமிட்ட யோசேப்பு ஒரு நல்ல பாடத்தை நமக்குக் கற்பிக்கின்றார். பிரச்சனை-குழப்பம் எதுவாயினும் அதை தம்பட்டமடித்து பெரிதாக்காமல், தன்னடக்கத்தோடு தீர்த்துக்கொள்ள வழிதேடும் தயாள குணத்தை அவரிடம் நாம் கற்றுக் கொள்வோம்.

**கண்ணியம் - மிக்க காவலன்**

தூய யோசேப்பு தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மரியாவையும், இயேசுவையும் எங்ஙனம் காத்து வந்தார் என்பதை நாம் திருவிவிலியத்தில் காண்கிறோம். பேறுகால மனைவியாகிய மரியாவை பேணிக்காப்பதாக இருக்கட்டும், குழந்தை இயேசுவையும், தாய் மரியாவையும் எகிப்துக்குக் கூட்டிச் சென்றதாகட்டும், நாசரேத்தில் நல்லதொரு குடும்பத் தலைவராக வாழ்ந்ததாகட்டும், யோசேப்பு கண்ணியம் மிக்க காவலனாகத் திகழ்ந்தார் என்றால் மிகையன்று. தனது குடும்பத்தைக் கண்ணும் கருத்துமாக பேணிக்காக்கும் ஒருவரே நீதிமானாக வாழ்ந்து காட்டவும் முடியும் என்பதற்கு தூய யோசேப்பு நல்ல உதாரணம். நம்மில் பலர் இறைப்பணிபொதுநலப் பணி என முனைப்புடன் செயல்பட்டு, தமது குடும்பப் பணிகளைச் செய்யத் தவறுவதால், ஏற்படும் குழப்பங்களைத் தவிர்க்க தூய யோசேப்பின் முன்மாதிரியைக் கற்றுக் கொள்வோம்.

**கடமைப்- பற்றுமிக்க சேவகன்**

தூய யோசேப்பு, தனது கடமைகளைப் பற்றுடன் செய்து முடித்த ஒரு சேவகனாய்த் திகழ்கின்றார். இதற்கு மிகச் சிறந்த ஓர் உதாரணம். பெத்லகேம் மாடடைக் குடில்... இயேசுவின் பிறப்புக்காக மாடடைக் குடிலில் இடம் கிடைத்தது. கொஞ்சம்

சிந்திப்போம். ஒரு மாடடைக் குடிலை மனிதக் குழந்தை பிறக்கும் ஒரு பிரசவக் குடிலாக மாற்றிட எவ்வளவு சிரமமாக இருந்திருக்கும்?... ஆனால் தூய யோசேப்பு கடமைப்பற்றுடன் தன்னிகரில்லா மீட்பராம் இயேசுவைத், தரணி காணச் செய்திட உழைத்தார். அசுத்தங்களைச் சுத்தமாக்கி, தீவனத் தொட்டியைக் குழந்தைத் தொட்டிலாக்கி, புல்லணையை மெத்தையாக்கி, கடுங்குளிரில் கதகதப்பூட்டி, இருளை ஒளிமயமாக்கி, குழந்தை இயேசு பிறக்கும் வகையில் ஓர் கடமை வீரராக செயலாற்றிய யோசேப்பிடம் நாமும் நாடிச் செல்வோம். நமது உள்ளங்களும் மாடடைக் குடில்போன்று பாவ நாற்றங்களால் அசுத்தமாகி இருக்கலாம். தூய யோசேப்பின் துணையுடன், அதனைச் சுத்தமாக்கி இறைவன் பிறக்கும் இனிய இடமாக மாற்றிட முன்வருவோம். கடமையைச் செய்து கடவுளைக் காண்போம்.

**இறுதியாக**

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்றெல்லாம் முழங்கும் முரண்பாடுள்ள மனிதர்களிடம் பேச்சு மட்டுமே மிச்சம்... ஆனால் செயல்வீரரான யோசேப்பு, தன்னிலே இவற்றைச் செயல்படுத்தி சிறப்பான இடம் பெறுகிறார். இயேசுவை நெஞ்சிலே சுமந்து நெருக்கம் காட்டி, தோளில் சுமந்து தோழனாய் மாறி, முதுகில் சுமந்து முழுமையாய் வாழ்ந்த தூய யோசேப்பைப்போல நாமும் இயேசுவுக்கு நெருக்கமாய் வாழ்வோம். தூய யோசேப்பின்மீது முத்தமிட்ட இயேசுவின உதடுகள் நம்மை முத்தமிடவும், அவர்மீது பதிந்த இயேசுவின் பிஞ்சுப்பாதங்கள் நம்மில் பதியவும், அவரது கரம்பிடித்துச் சென்ற இயேசுவின் பிஞ்சுக்கரங்கள் நம்மையும் பற்றிக்கொள்ளவும் நாம் முன்வருவோம். நீதிமானாகிய தூய யோசேப்பு நம்மையும் நீதியின் பாதையில் நடத்துவார்.